## உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் - 2016

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளூராட்சி சேவைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 264) 62(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாகிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

# 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

2013 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 03/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் பொதுக் கணக்கின் ஊடாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக ஓய்வூதியத்தைச் செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 1,090,670,647 தொகையான ஓய்வூதியச் செலவினம் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தன.

### 2.2.3 அதிகாரபலத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

கிடைக்க வேண்டிய பங்களிப்புப் பணத்திற்குரிய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படியும் அத்திகதியில் உள்ளவாறான பற்றுச்சீட்டுப் பதிவேட்டிற்கும் இடையே காணப்பட்ட ரூபா 63,071,535 தொகையான வேறுபாட்டை உரிய உள்ளூராட்சி நிறுவனங்களின் மீதிகளுடன் உறுதிப்படுத்தாமலும், ஓய்வூதியம் பணிப்பாளர் நாயகத்தினதும், அமைச்சின் செயலாளரினதும் மற்றும் திறைசேரியினதும் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 06 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புப் பண மீதிக்கும் மீளாய்வாண்டின் நிதியக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட மீதிகளின் பட்டியல்களுக்கும் இடையே ரூபா 637,799 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

ஓய்வூதிய தரவு முறைமையின் பிரகாரம் 2016 சனவரி மாதத்திற்கும் 2016 திசெம்பர் மாதத்திற்கும் இடையே நிதியத்தின் ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை 310 இனால் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது. கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட மீதி பட்டியல்களின் படி ரூபா 3,091,382 பெறுமதியொன்று ஆண்டின் செலவினமாகக் கருதப்பட்டிருந்த போதிலும், அத்தொகை மரணித்தவர்களின் எண்ணிக்கைக்குரியதா என கணக்குகளின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 பெறவேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஓய்வூதியப் பங்களிப்புப் பண பட்டியலின் பிரகாரம் 109 உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 525,969,061 கூட்டு மொத்தத் தொகையிலிருந்து எத்தொகையும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக கவனம் செலுத்தி போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிருபத்தின் 4:3 ஆம் பந்தி | உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,385,579,004 தொகையான நிலுவை பங்களிப்புப் பணம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்துவதற்குள்ள ஏதாவது நிதியிலிருந்து கழித்துக் கொள்வதற்கோ அல்லது அறவிட்டுக் கொள்வதற்கோ போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் 4.1 (அ) பந்தி | மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டு அதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2011 திசெம்பர் 15 ஆந் திகதிய 4/2011 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை | ஓய்வூதிய வகைப்படுத்தலின் பிரகாரம் நிதியத்தின் செலவினம் கணனி முறைமையின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் செலவினங்களைப் பெற்று கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | 2012 பெப்ரவரி 08 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றுநிருபம் | அந்தந்த மாதத்தில் நிதியத்திற்குரிய அங்கத்தவர்களில் மரணித்தவர்கள் தொடர்பான அறிக்கை அடுத்தவரும் மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலாளர்களிடமிருந்து பெறப்பட்டு அந்த அறிக்கையின் பிரகாரம் நாளதுவரையாக மரணித்தவர்களை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 36,428,661 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,721,764 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளில் ரூபா 42,150,424 வீழ்ச்சியினைக் காட்டியது. எவ்வாறாயினும் மேலே 2.2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளின் அடிப்படையில் இந்த நிதி விளைவுகளில் மேலும் வேறுபாடுகள் ஏற்படாது என்பதைப் புறக்கணிக்க முடியாதுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி சேவையில் ஓய்வூதியத்துடன் உள்ள அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் செலுத்தும் நோக்கத்துடன் இந்த நிதியம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் 253 ஆம் செலவினத் தலைப்பின் கீழ் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் நிதியத்தின் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக இந்த நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

நிதியத்தின் கணக்கிற்கு சேகரிக்கப்படுகின்ற பங்களிப்புப் பணம் ஒவ்வொரு மாதத்தின் இறுதியின் போது மாத்திரம் திணைக்களத்தின் பொதுக் கணக்கிற்கு மாற்றப்பட்டமையால் ஒவ்வொரு மாதத்தினதும் முதல் இரண்டு வாரங்களிலும் சேகரிக்கப்பட்ட ரூபா 1,506,900 முதல் ரூபா 11,821,245 வரையிலான வீச்சில் காசு மீதியொன்று பயனற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2016 சனவரி 28 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(I)(II) ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் நிதியத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | ------------------------------------------- | -------------------------------- |
| (அ) | கணக்கீடு | நிதியத்தின் செயற்பாட்டுத் தன்மையை பிரதிபலிக்கும் வகையில் வருமானங்களும் செலவினங்களும் கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) | பங்களிப்புப் பண அறவீடு | நிலுவைப் பங்களிப்புப் பணத்தையும் மீளாய்வாண்டின் பங்களிப்புப் பணத்தையும் உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | அங்கத்தவர் பதிவேடு | பிரதேச செயலக மட்டத்தில் தகவல்களைச் சேகரித்து அங்கத்தவர் தரவுகள் நாளது வரையாக்கப்படாமை மற்றும் அதன்படி ஓய்வூதியச் செலவினம் உறுதிப்படுத்தப்படாமை. |